யுனிசெப்

ஐக்கிய நாடுகள்
மனித உரிமைகள்
நிலையம்



# தெருவோரச் சிறுவர்கள்

நகரங்கள் வளர வளர அவற்றின் உருவழிவந்த ஓரங்களில் வாழும் சிறுவர், சிறுமியர் தொகையும் பெருகுகிறது. பாலியப் பருவத்தை இழந்த சிறுவருக்கென ஒரு கொடி இருக்குமானால் நகரத்துத் தெருவோரச் சிறுவன் அதன் சின்னமாக விளங்குவான்.

2000 ஆவது ஆண்டளவில் உலக சனத்தொகையில் சரிபாதிப்பேர் 25 வயதுக்குட்பட்டோராயும் நகரங்களில் வசிப்போராயும் இருப்பர். அவர்களில் அநேகர் ஏழைகளாக வாழ்வார்கள். 1980 களின் நடுக்கூற்றில் இருந்தவர்களைப் பார்க்கிலும் 24 கோடியே 70 லட்சம் கூடுதலான 5 முதல் 19 வயதுக்குட்ட நகரச் சிறுவர்கள் இருப்பார்கள். இவர்களிற் பெரும்பான்மையானவர்கள் (23 கோடியே 30 லட்சம்) வளர்முக நாடுகளில் வசிப்பர். 2000 ஆவது ஆண்டளவில் லத்தீன் அமெரிக்காவில் மட்டும் 30 கோடி பருவமடையாச் சிறுவர்கள் நகரங்களைச் சார்ந்தவர்களாக இருப்பார்களென்றும் இவர்களில் 30 சதவீதத்தினர் ஏழைகளாக விளங்குவர் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. முற்றாக அல்லது அரைக்கரைவாசி கைவிடப்பட்ட நிலையில் வாழும் சிறுவர்களின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் உயரும்.

தெருவோரச் சிறுவர்கள் பற்றிய வரைவிலக்கணத்தைப் பொறுத்து அவர்கள் தொடர்பான கணிப்பும் வேறுபடும். ஆயினும் 10 கோடி என்னும் யுனிசெப்பின் கணிப்பு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வறிய நாடுகளில் மட்டுமன்றிச் செல்வந்த நாடுககளிலும் தெருவோரச் சிறுவர்கள் காணப்படுகிறார்கள். ஆயினும், பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளிலேயே வசிக்கின்றனர். லத்தீன் அமெரிக்காவில் 4 கோடிப் பேர் உள்ளனர்; ஆசியாவில் 2 1/2 முதல் 3 கோடிப் பிள்ளைகளும், ஆபிரிக்காவில் ஒரு கோடிப் பேரும் காணப்படுகின்றனர். இவர்களுள் அனேகர் ஆண் பிள்ளைகள்.

தெருவோரச் சிறுவர்கள் பிரச்சினை தொடர்பான கணிப்புகளுக்கும், தெருவோரச் சிறுவர் மற்றும் வசிப்பிடமின்மை என்பனவற்றுக்குமுள்ள வரையறைக்கும் நிரம்பச் சம்பந்தமுண்டு. புள்ளி விவர நிபுணர்களும், சர்வதேச முகவர் நிலையங்களும், உலகின் பெரு நகரங்களின் விளிம்புகளில் வாழ்க்கை நடத்தும் கோடிக் கணக்கான சிறுவர் சிறுமியருக்கு உதவ முனையும்போது தமது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடன் ஓரளவு உறவுகளை வைத்திருக்கும் பிள்ளைகளுக்கும் தான்றோன்றிகளாகத் தெருக்களையே கதியாகக் கொண்ட சிறுவர்களுக்கும் வேறுபாடு காணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளன. இந்த வேறுபாட்டை நிர்ணயிப்பது முக்கியம். ஏனென்றால், வசதியற்றுத் தெருவோரங்களில் வாழும் குடும்பங்ள், தமது பிள்ளைகளுக்கு இருப்பிடமும் பாதுகாப்பும் கொடுக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியுமானால் தெருச் சிறார்களைப் பராமரிப்பதற்கான நெடுங்காலச் செலவினங்களை சமூகம் குறைத்துக்கொள்ள ஏதுவாயிருக்கும்.

நகர்மய முன்னேற்றம், வறுமை, மாற்றுவழிகள் இல்லாமை என்பனவற்றின் விளைவே தெருச்சிறுவர் பிரச்சினை. சிலருக்கு, குலைந்த குடும்பங்கள் அல்லது வன் செயல்களிலிருந்து நிரந்தர விமோசனமளிக்கும் இடமாக வீதிகள் விளங்குகின்றன. ஏனையோருக்கு குடும்ப வருமானத்தை அதிகரித்துக்கொள்ள, அல்லது நேரத்தைப் போக்கும் ஓர் இடமாக அமைகிறது. இன்னும் சிலருக்கு, மகிழ்ச்சியாகக் காலத்தைக் கடத்தும் ஒரு வழியாக அல்லது வீட்டில் நிலவும் நெருக்கடியான சூழலிலிருந்து தற்காலிக விடுதலை பெறுவதற்கு ஏற்ற இடமாகத் தெருக்கள் அமைகின்றன.

தெருவோரச் சிறார்களை நான்கு பிரதான பிரிவினராக யுனிசெப் வகுத்துள்ளது:

★ உயிர் வாழ்வதும், உறைவிடமுமே உடனடித் தேவைகள் எனக் கருதி வீதியோரங்களில் வாழும் சிறுவர்கள்,

★ தமது குடும்பத்தவர்களிடமிருந்து பிரிந்து விடுதிகள், கைவிடப்பட்ட வீடுகள், கட்டடங்கள் போன்ற தற்காலிக உறைவிடங்களில் வசிக்கும் சிறுவர் சிறுமியர்கள் அல்லது இடம் மாறி நண்பர்களுடன் வாழும் பிள்ளைகள்.

★ தமது குடும்பத்தவர்களுடன் உறவு கொண்டிருந்தாலும், வறுமை, இடநெருக்கடி குடும்பத்தில் காணப்படும் பாலியல் சார்ந்த அல்லது வேறு வகை உபத்திரங்கள் காரணமாகச் சில இரவுகளிலும் பெரும்பாலன பகல்களிலும் தெருக்களில் திரியும் சிறுவர் சிறுமியர்கள்.

★ நிறுவனங்களின் பராமரிப்பில் இருப்பவர்களும், இருப்பிடமற்ற நிலைமையில் வெளியேறி மீண்டும் அவ்வாறான நிலையை எய்த நேரும் என அஞ்சுகின்றவர் களுமான பிள்ளைகள்.

நகரங்கள் ஒருபோதும் பிள்ளைகளைக் கருத்திற் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதில்லை. அத்துடன் சில சமூகங்களில் அவல நிலைக்குள்ளாகிக் கட்டுக்கடங்காமலிருக்கும் இளைஞர்கள் பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளறி விடுகிறார்கள். தெருவோரச் சிறுவர்கள் கொலம்பியா தேசத்தில் “கமின்ஸ் (போக்கிரிகள்)” அல்லது “சிஞ்சஸ்” (மூட்டைப்பூச்சிகள்)” என்றும், பிரேஸில் நாட்டில் “மார்ஜினே” (களவாணிகள்) என்றும் பெரு நாட்டில் “பஜரே புருடரோ” (பழக் குருவிகள்) என்றும், வியட்நாமில் “புயிடோய்” (குப்பைப் பிள்ளைகள்) என்றும் ருவாண்டாவில் “சாசிகோமான்” (போக்கிலிப் பயல்கள்) என்றும், கமரூனில் “முஸ்டீக்ஸ்” (கொசுக்கள்) என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களின் வாழ்க்கையில் உண்மையான கரிசனையுடையவர்கள் சிலர் இருக்கிறார்கள்; ஆனால், பெரும்பாலும் சுரண்டலுக்கும் உபத்திரவங்களுக்கும் உள்ளாவதே இப் பிள்ளைகளின் தலைவிதி. தென் அமெரிக்காவின் பெரிய நகரமொன்றில் தினமும் இரண்டு சிறுவர்கள் வீதம் வன்செயல்களுக்கு இலக்காகிறார்கள்.

பூர்வீகம் அல்லது சூழல் எவ்வாறாக இருந்தாலும் படிப்பும், குடுபத்தின் உறுதியான பற்றுக்கோடும் இல்லாத பிள்ளைகள் முறைசாராப் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்க்கை நடத்த முடியுமேயன்றி, முன்னேறுவதென்பது முடியாத காரியமாகும்.

நகர் சார்ந்த பகுதிகளின் துரித வளர்ச்சியும் தீவிர வேலையில்லாத் திண்டாட்டமும் எந்தத் தொழிலுக்கும் கடும் போட்டியை ஏற்படுத்துகின்றன. இதனால் லட்சக் கணக்கான சிறுவர் சிறுமியர்கள் அந்நியர்களின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக அவதியுறுகிறார்கள். பலர் அவர்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

ஆயினும் பெரும்பாலான வளர்முக நாடுகளின் பெரிய நகரங்களிலே சேவைகள் சார்ந்த பொருளாதாரத் துறையின் கீழ்மட்டத்தில் இப் பிள்ளைகள் தமக்கெனத் தனித்தனி ஸ்தானங்களை உருவாக்கியிருக்கின்றனர். எடுபிடி வேலைகள், சப்பாத்து மினுக்குதல், சிறு பண்டங்களைக் கொண்டு திரிந்து விற்றல், கார்களைக் கழுவுதல், அவற்றை வீதிகளில் நிறுத்த உதவி, பாதுகாத்தல் போன்றவற்றுடன் சமூகத்துக்குப் பயனுள்ள பல கூலி வேலைகளை· இவர்கள் செய்கிறார்கள். அநேகர் ஏழு அல்லது

அதிலும் குறைந்த வயதில் இருந்தே தம்மைத் தாமே தாபரிக்கப் பாடுபடுகிறார்கள். ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா போன்றவற்றின் நகரங்களிலே, இத் தெருச்சிறார்கள் மிகச் சகஜமான ஒன்றாகிவிட்டமையால் பெரியவர்கள் அவர்கள் பள்ளிக்கூடம் செல்லாதிருப்பது ஏன் என்ற கேள்வியைக் கேட்பதில்லை.

இன்னும் பல நகரங்களில் மதச்சார்புடைய அல்லது அரச சார்பற்ற அமைப்புகள் இத்தகைய பிள்ளைகளுக்குப் புகலிடமளித்து வருகின்றன. இளைஞர்களை முறைசாராப் பாடசாலை அல்லது தொழிற்பயிற்சிச் சூழலில் வளரத் தூண்டும் வகையில், உண்ண உணவு அல்லது படுக்க இடம் கொடுத்து உதவி வருகின்றன. புளோரன்ஸ் நகரில் (இத்தாலி) அமைந்துள்ள யுனிசெப் சர்வதேசச் சிறுவர் மேம்பாட்டு நிலையம், நகர்சார்ந்த ஏழைச் சிறுவர் சிறுமியரின் நிலைமை தொடர்பாக ஐந்து நாடுகளில் (பிரேஸில், இந்தியா, இத்தாலி, கென்யா, பிலிப்பைன்ஸ்) மேற்கொண்ட ஆய்வுகளை வெளியிட்டது. நிலையத்தின் நகர்சார் சிறுவர் செயல் திட்டம் நடத்திய இந்த ஆய்வுகள், நகரத்தின் வறுமையின் மத்தியில் வாழும் பிள்ளைகளின் பிரச்சினை உலகின் பல பாகங்களிலும் வரவர மோசமடைகிறதென்பதை உறுதிப்படுத்துகின்றது.

பல வளர்முக நாடுகளில், யுனிசெப்பின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் நகர் சார்ந்த அடிப்படைச் சேவைகள், ஏழைகளின் பிள்ளைகள் மீது கவனம் செலுத்துகின்றன. பிலிப்பைன்ஸில் பிள்ளைகளுக்கான செயற்திட்டங்களாவன, பெண்களுக்கான வருவாய் உண்டாக்கும் வேலைத்திட்டங்கள், செம்மையான சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்குச் சேவைகள், குடும்பத்திட்டம் ஆகியவற்றுடன் வறிய சமூகங்களுக்கான சுற்றுப்புறச்சூழல் மேம்பாடு, மற்றும் போதிய வடிகால் வசதிகள் போன்ற வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம், பிள்ளைகளின் உயர்ந்த நலன்கள் எவ்வாறான சூழ்நிலைகளிலும் பேணப்படல் வேண்டுமெனவும், பெற்றோர் அல்லது மற்றோர் போதுமான பராமரிப்பை வழங்கத் தவறும் பட்சத்தில் பங்காளி நாடுகள் அப்பொறுப்பை ஏற்கவேண்டுமெனவும் வரையறுத்துள்ளது. (உறுப்புரை 3)

சமவாயத்தின் 54 உறுப்புரைகளிற் பெரும்பாலானவை, பிள்ளைகள் சம்பந்தப்பட்டன. குடும்பச் சூழலை இழந்த சிறுவர் சிறுமியர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் (உறுப்புரை 20), பெற்றோர் அல்லது பராமரிப்போரின் உபத்திரவம், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து காக்கப்பட வேண்டுமெனவும் (உறுப்புரை 19) குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்பதற்கும் (உறுப்புரை 28), தகுந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கும் (உறுப்புரை 27) உரிமையுண்டென்பதைச் சமவாயம் அங்கீகரிக்கிறது.

சிறுவர் சிறுமியரின் பிள்ளைப் (பாலியப்) பராயம் மற்றும் அதனுடன் கூடிய ஓய்வு, பொழுதுபோக்கு என்பனவற்றுக்கு அவர்களுக்குள்ள உரிமை (உறுப்புரை 31), பொருளாதார மற்றும் பாலியல் தொடர்பான சுரண்டல்கள், உபத்திரவங்களிலிருந்து பாதுகாப்பு (உறுப்புரைகள் 32, 34, 36) என்பன பிள்ளையின் உரிமை எனச் சமவாயம் கூறுகிறது. பாலிய வயதுப் பிள்ளைகள் தொடர்பான சட்டதிட்டங்களை அமுல் செய்வதில் பாகுபாடு காட்டக்கூடாது எனவும் அத்தகைய பாகுபாடுகளிலிருந்து பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும், சமவாயம் வலியுறுத்து கிறது. (உறுப்புரை 40). தமது வறுமையின் காரணமாக சிறுவர், சிறுமியர் பொலிஸாரிடமும், சட்டத்தை அமுல் செய்யும் ஏனைய அதிகாரிகளிடமும் இரட்டிப்புத் தண்டனை பெறுவது சகஜம்.

நகரங்களுக்கு மானிடத் தோற்றம் அவசியம். வறுமையின் பிடியிற் சிக்கி எதிர்நீச்சல் போடும் கோடிக்கணக்கான சிறுவர் சிறுமியரின் தேவைகளுக்கு ஏற்றவாறான பராமரிப்பையும் வளர்ப்பையும் வழங்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் சமுதாய வாரியான செயற்பாடு அவசர தேவையாக விளங்குகிறது. அது தார்மீக கடமை என்பதற்காக மட்டுமல்ல; அவ்வாறு செய்யாவிட்டால் எம்மத்தியில் வாழும் வசதியற்ற, குரோத மனப்பான்மை படைத்த மக்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகும்; மேலும் பல பிரச்சினைகள் உருவாகும் என்பதற்காகவும் நாம் இதில் அவசியம் அக்கறை செலுத்த வேண்டும்.